வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P.1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu


Email : eelanaduweekly@gmail.com  மலர் : 05  19.08.2024 திங்கட்கிழமை  இதழ் : 232  பக்கங்கள் : 12




### தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும்

# தமிழ் அரசு கட்சியினர் விலகி எம்முடன் இணையவேண்டும்!

## செல்வம் அடைக்கலநாதன் அழைப்பு



முல்லைத்தீவு, ஓகஸ்ட் 19


**தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியினர் அதிலிருந்து விலகி வந்து தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புடன் இணைய வேண்டும்.**

**- இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம்வகிக்கும் தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.**

செப். 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளரின் முதலாவது பரப்புரைக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை முல்லைத்தீவு - முள்ளியவளை - வற்றாப்பளையில் நடைபெற்றது. தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தான் நம்பிய கொள்கைக்காக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியேறினார். இதுபோல, தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினரும் அங்கிருந்து 11



வரலாற்று பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற தருணம்...! (படம் - லி. ஜெகன்)

மேலும் படங்கள் பக்கம் 5இல்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் உண்மையை வெளிப்படுத்துவோம்

### கர்தினாலுக்கு மீண்டும் உறுதியளித்த சஜித்

கொழும்பு, ஓக. 19

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக மக்கள் எதிர்பார்த்துள்ளது போல உண்மைத்தன்மையை வெளிக்கொணர்வதற்கு நான் உட்பட ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியினர் அனைவரும் தயாராக இருக்கிறோம்

- இவ்வாறு கர்தினால் மல்கம் ரஞ்சித் உள்ளிட்ட கத்தோலிக்க மதகுருக்களிடம் தெரிவித்தார் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ.

கொழும்பிலுள்ள ஆயர் இல்லத்துக்கு நேற்று ஞாயிற்றுக் கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் 11

## 100 அடி ஆழத்தில் மீன்பிடித்த மீனவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 19


கடலில் சுமார் 100 அடி ஆழத்தில் ஒட்சிசன் சிலிண்டரை பயன்படுத்தி மீன்பிடித்த மீனவர் நெஞ்சுவலியால் உயிரிழந்தார்.

நாகர்கோவில் கடற்பரப்பில் 11

# தமிழ் அரசுக் கட்சிக்கு மீளவும் தலைவர் தெரிவு

வவுனியா, ஓக. 19

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் சபையை கூட்டி யாப்பின்படி மீண்டும் தலைவர், செயலாளர் தெரிவுகளை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம். பி. தெரிவித்துள்ளார். 11



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மஞ்சத் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது...! (படம் - ஐ. சிவசாந்தன்)

### யாருக்கு ஆதரவளிப்பது?

# தேர்தல் அறிக்கைகளின் பின்னரே தமிழ் அரசுக் கட்சி முடிவெடுக்கும்!

வவுனியா, ஓக. 19

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் தேர்தல் அறிக்கைகளை வெளியிட்ட பின்னர் மத்திய குழு கூடி ஆராய்ந்து யாருக்கு ஆதரவளிப்பதென முடிவு எடுப்பது என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

அத்துடன், அதுவரை தென்னிலங்கையின் பிரதான கட்சிகளின் பேச்சாளர்களுடன் 11

# சமூக வலைதளங்களும் கண்காணிக்கப்படும்!

கொழும்பு, ஓக. 19

ஜனாதிபதித் தேர்தல் விதிகள் மீறப்படுகின்றனவா என்பது தொடர்பில் சமூக வலைதளங்களும் கண்காணிக்கப்படவுள்ளன என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அறிவித்துள்ளது.

சமூக ஊடக கண்காணிப்பு அறிக்கைகள் இன்று திங்கட்கிழமை முதல் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வழங்கப்படும் என்று 11

# தந்தை செல்வாவின் சமாதியில் வணங்கி பிரசாரத்தை ஆரம்பித்த அரியநேத்திரன்!

- சி. சிலக்சன் -

யாழ்ப்பாணம், ஓக. 19

தந்தை செல்வா நினைவிடத் தில் வணங்கித் தனது பிரசாரத்தை ஆரம்பித்தார் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக பா. அரியநேத்திரன் போட்டியிடுகிறார். நேற்று ஞாயிற்றுக் கிழமை முல்லைத்தீவு - வற்றாப் பளையில் தனது முதல் பிரசாரத்தை அவர் தொடங்கினார்.

முன்னதாக யாழ்ப்பாணம் 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

வாய்விட்டுச் சிரிப்பது உடல் நலத்துக்கு நல்லது என்று பொது வாகச் சொல்வார்கள். விஞ்ஞான பூர்வமாக அது சரியானதா என்பது இந்த ஊர்க்குருவிக்கு தெரியவில்லை. ஆனால், ஒரு நாள் வாய்விட்டுச் சிரித்தபோது - சிரிப்பை அடக்கமுடிய வில்லை. ஆனால், திடீரென்று மாரடைப்பு வந்ததுபோல ஓர் உணர்வு ஏற்பட்டது.

இதனால்தான் அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்றார்களோ தெரிய வில்லை.

என்னடா இப்படியெல்லாம் சிரிப்பைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறார் ஊர்க்குருவியார் என்று நீங்கள் நினைக்கலாம்.

இன்று காலை லண்டனிலி ருந்து பிரமுகர் ஒருவரிடமிருந்து வட்ஸ்அப்பில் ஒரு செய்தி வந்தது. அதுபோன்ற செய்தியை ஏதாவது சமூகவலைத்தளங்களில் கண்டிருந்தால் அதனைக் கண்டு கொண்டிருக்கவே போவ தில்லை. ஆனால், அதனை அனுப்பிய பிரமுகர் இந்த ஊர்க் குருவியின் மரியாதைக்குரிய ஒருவர். அவரின் அரசியல் கருத்துகளில் உடன்பாடு இல்லாவிட்டாலும் அவர்மீது ஒரு மரியாதை உண்டு. அதனால், அதன் முக்கியத்துவம் சற்று அதிகமாகியதால் அதுபற்றி எழுதவேண்டும்போல இருந்தது. அதனைப் படிக்கின்றபோது நிச்சயம் உங்களுக்கும் சிரிப்பு வரும். அடக்கமுடியாமல் சிரிப் பீர்கள் என்பதால் முன்கூட்டியே எச்சரிக்கை செய்வது நல்லது என்று பட்டதால் அதனை எச்சரிக்கையாகத் தந்தேன். அவ்வளவுதான்.

இனி அந்த லண்டன் பிரமுகர் அனுப்பிய ஓர் அறிவித்தல் செய் தியை அப்படியே கீழே தருகின் றேன்.

"சுவிஸ் தமிழ் மக்களே உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு: உயிருக்காகப் போராடும் நிலை யில் இருக்கும் தமிழீழத் தேசியத் தலைவரை சந்தித்து ஆரத்தழுவ வேண்டுமா?

இதோ முந்துங்கள் முதல் வரும் பத்து பேர் தமிழீழ தேசி யத் தலைவரை சந்தித்து ஆரத் தழுவி உணவு உண்ணும் அற்புத வாய்ப்பைப் பெறலாம். தமிழீழத் தேசியத் தலைவரை சந்தித்து ஆரத்தழுவ அறுபது ஆயிரம் சுவிஸ் பிராங்க். மேலதிக விவரங் களுக்கு உலகத்தமிழர் ஒருங்கி ணைப்புக்குழு"

இதுவே அந்த செய்தி. "டூப்ளிக்கெற்" துவாரகாபோல யாரோ ஒருவரின் படத்தைப் போட்டு விளம்பரம்.

சில நிமிடங்கள் நீங்கள் சிரித்து முடித்திருப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

இந்த ஊர்க்குருவியும் உங்க ளைப் போலத்தான் கொஞ்ச நேரம் சிரித்து முடித்தபின்னர், ஆற அமர இருந்தபோதுதான் - நமது இனத்தை நினைத்து வேதனை ஏற்பட்டதையும் தவிர்க்க முடியவில்லை.

தங்களை விட்டால் இந்த உலகத்திலேயே அறிவானவர்கள் இருக்கமாட்டார்கள் என்று மார்தட்டிய தமிழ் இனம், இன்று எப்படியெல்லாம் சீரழிந்து விட்டது என்பதை நினைக் கின்ற போது வேதனைதான்.

சரி இனி இன்று சொல்ல வந்த விடயத்துக்கு வருகின் றோம்.

லண்டனிலிருந்து பிரமுகரி டம் வந்த வட்ஸ்அப் செய்தி போலவே தெற்கின் அரசியல் பிரமுகர் ஒருவரிடமிருந்தும் ஒரு செய்தி வந்திருந்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கடந்த ஜூலை முத லாம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடத்திய கருத்துக்கணிப்பு விவரம் அது.

இது போன்ற கருத்துக்கணிப் புகளை இந்த ஊர்க்குருவி நம்புவ தில்லை என்பது வாசகர்களுக்குத் தெரிந்ததுதான். ஆனாலும் இந்த மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின்மீது இருக்கின்ற கவனம் சற்று வித்தியாசமானது என்பதால் அந்தக் கருத்துக் கணிப்பைப் பார்க்கலாம் என்று தோன்றியது.

"உங்கள் குடும்பத்தின் உட னடி - தற்போதைய தேவைகளை நிவர்த்தி செய்ய யார் பொருத்த மானவர் என்று நினைக்கிறீர் கள்?" என்ற கேள்விக்கு பதில ளித்தவர்களில் இருபத்தி நான்கு தசம் மூன்று வீதமானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பத்தொன்பது தசம் மூன்று வீத மானவர்கள் சஜித் பிரேமதாஸ வுக்கும் பதினைந்து தசம் ஐந்து வீதமானவர்கள் அநுரகுமார திஸ நாயக்காவுக்கும் ஆதரவாகக் கருத்து சொல்லியிருக்கின்றனர். பன்னிரண்டு வீதமானவர்கள் தெரியாது என்றும் இருபத்தி எட்டு தசம் எட்டு வீதமான வர்கள் யாரும் இல்லை எனவும் தெரிவித்துள்ளனராம்.

இதேவேளை, இன ரீதியான கருத்துகளில், சிங்கள மக்களில் முப்பத்தி மூன்று வீதமானவர்கள் யாரும் இல்லை என்று தெரிவித் துள்ளனர். அண்ணளவாக நாற்பது இலட்சம் சிங்கள மக்கள் இந்த மூன்று பேர் மீதும் நம்பிக்கை கொள்ளவில்லை என்பது கவனத்திற்குரியது.

இந்தக் கருத்துக்கணிப்பு பதின்மூன்று மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கொண்ட நாட்டில் வெறும் ஆயிரத்து முன்னூற்றி ஐம்பத்தி இரண்டு பேரிடமே கருத்துக் கேட்கப் பட்டு வெளியிடப்பட்டிருப் பதும் கவனிக்கவேண்டியது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல இந்த கருத்துக்கணிப்புகளை நிச்சயம் நாம் கவனத்தில் எடுக்கமுடியாது என்றாலும் இதுவரை வெளிவந்த கருத்துக்கணிப்புகள் எல்லா வற்றிலும் மூன்றாவது ஆளாக இருந்த தற்போதைய ஜனாதிபதி தற்போது முதலிடத்துக்கு வந்திருக்கிறார் என்பது நம்ப முடியாததாக இருந்தாலும் இவர்கள் மூவர் மீதும் இன்னமும் நம்பிக்கை கொள்ளாத சுமார் நாற்பது வீதமானவர்கள் கடை சியில் இவர்களில் ஒருவருக்குத் தான் வாக்களிக்கவேண்டும் என்பதால் அவர்களின் முடிவு தான் தேர்தல் முடிவுகளை தீர்மானிக்கவிருக்கின்றதோ?

**- ஊர்க்குருவி.**

# முல்லைத்தீவில் முதல் பரப்புரையை ஆரம்பித்தார் தமிழ் பொது வேட்பாளர்!







முல்லைத்தீவு, ஒக. 19

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேந்திரன் தனது முதல் பரப்பு ரையை நேற்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத் தீவில் ஆரம்பித்தார்.

முன்னதாக, முள்ளிவாய்க்கால் மண்ணுக்கு சென்ற அரியநேந்திரன் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத் தினார். பின்னர், முள்ளியவளை - வற்றாப் பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில் பங்கேற்றார்.

வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிறேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், யாழ். மாநகர முன்னாள் முதல்வர் மணிவண்ணன், ஜனநாயக போராளி கள் கட்சியின் தலைவர் வேந்தன், தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் யதீந்திரா, நிலாந்தன் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

# நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஒக. 19

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறிலசிறீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடை பெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று திங்கட்கிழமை தம்பாட்டி முத்துமாரி அம்மன் பஜனை குழுவினரின் பஜனை நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 19

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திரு விழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வு களை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற வுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறிலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

அவுஸ்திரேலிய மெல்பர்ன் மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர் பிரம்மசிறீ மகாதேவ ஐயர் ஜெயராம சர்மா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வேலணை பிர தேச செயலாளர் க. சிவகரன் பிரதம அதிதியா கவும் வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் அருமைநாயகம் ஜெயக்குமரன், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங் காவலர் சபை செயலாளர் ந. மோகனரூபன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் பங்கேற் பர்.

இதில், நயினாதீவு நாகபூசணி அம்மன் அறநெறி பாடசாலை, புங்குடுதீவு மடத்து வெளி முருகன் அறநெறி பாடசாலை, புங்குடு தீவு காளிகா பரமேஸ்வரி அம்பாள் அறநெறி பாடசாலை,

மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்க வுள்ளனர். விசேட நிகழ்வாக அனுராகம் கவின்கலை நிலையம் வழங்கும் வீணாவர்ஷ னம் நிகழ்வும் நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள் ளார். (ஐ)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக. 19

"தேர்தல்களும் தேர்வுகளும் தீர்வின்றி தொடரும் மக்கள் பிரச்னைகளும்" என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞான படிப்பு வட்ட கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கே. கே. எஸ். வீதி கொக்கு வில் சந்தியில் உள்ள தேசிய கலை, இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் தொடக்க வுரையை ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பா ளர் பி. முத்துலிங்கம் ஆற்றுவார். கருத்து ரையை ஓய்வுநிலை உதவி கல்விப் பணிப்பா ளர் மு. அநாதரட்சகன் வழங்குவார். இதைத் தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் கலந்துரையாடல் நடைபெறும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
19.08.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், ஆவணி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# புதிய அரசியல் பாய்ச்சலுக்கான சாத்தியம்!

கோட்டாபயவின் நண்பர் திலித் ஜயவீர தனது பிரசார கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தியிருக்கின்றார். ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் நிகழ்வில் பங்கு கொண்டிருக்கின்றனர். இதேபோன்று, பிரமாண்டமான கூட்டங்கள் இனிவரும் நாட்களில் தமிழ் மக்கள் மத்தியில் நடைபெறலாம். தங்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு உண்டு என்பதைக் காண்பிக்கும் நோக்கில் அரச ஆதரவு கட்சிகள் பெருமெடுப்பிலான ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம். தேர்தல்கால திருவிழாக்கள் போன்றவைதான் இவைகள் அனைத்தும். தமிழ் மக்களின் வாக்குகள் தங்களின் வெற்றிக்குத் தேவை என்பது முன்னர் எப்போதும் இல்லாதவாறான தேவையாக மாறியிருக்கின்றது. எனவே, அனைத்து தென்னிலங்கை வேட்பாளர்களும் தமிழ் மக்கள் மத்தியில் முகாமிடுவார்கள்.

இவ்வாறானதோர் அரசியல் சூழலில் தமிழ் மக்கள் என்ன செய்யப் போகின்றனர்? வழமைபோல் வாக்களித்துவிட்டு ஏமாற்றிவிட்டார்கள் என்று கூறப் போகின்றனரா அல்லது புதுவிதி ஒன்றை எழுதப் போகின்றனரா? அவ்வாறு புதுவிதி ஒன்றை எழுதப் போகின்றனர் என்றால் - அவர்களுக்கு முன்னாலுள்ள ஒரேயொரு தெரிவு தமிழ்ப் பொது வேட்பாளர் மட்டும்தான். இதனைப் புரிந்துகொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் கொள்கை அடிப்படையில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றன. அவ்வாறான கட்சிகளும் மக்கள் அமைப்புகளும் இணைந்ததே தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பாகும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது பாரம்பரிய தமிழ்த் தேசிய அரசியல் அணுகுமுறைக்கு முற்றிலும் மாறானது. பாரம்பரிய தமிழ்த் தேசிய அணுகுமுறை என்பது பாராளுமன்றத் தேர்தல்களின்போது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை முன்வைப்பதும் ஆனால், ஜனாதிபதித் தேர்தல் என்று வருகின்றபோது, எவ்வித உடன்பாடுகளுமின்றி தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதும்தான் தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடாக இருந்திருக்கின்றது. இது செல்வநாயகம் காலம் தொடக்கம் இன்றுவரையில் இதுதான் நிலைமை. தமிழ் பொது வேட்பாளர் என்பது அவ்வாறான பழைய அணுகுமுறையில் ஓர் உடைவை ஏற்படுத்தியிருக்கின்றது. இது, அடிப்படையில் ஒரு பரிசோதனை முயற்சிதான். ஆனால், தமிழ் மக்கள் விழிப்புற்றால் இது இலங்கைத் தீவின் அரசியலில் ஒரு பெரும் உடைவை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டது.

தமிழ் மக்கள் என்ன செய்யப் போகின்றனர் என்பதில்தான் இந்த முயற்சியின் வெற்றி தங்கியிருக்கின்றது. செய்தி சரியான வகையில் தமிழ் மக்களை சென்றடைந்தால் தமிழ்ப் பொது வேட்பாளர் கடந்த பதினைந்து வருடகால தமிழர் அரசியலில் ஒரு புதிய பாய்ச்சலாக அமையும். ஒருவேளை, போதியளவு மக்கள் மத்தியில் விடயங்கள் கொண்டு செல்லப்பட்டபோதும் தமிழ் மக்கள் கணிசமாக இதிலிருந்து விலகினால் அதிலிருந்தும் தமிழ்த் தேசிய தரப்புகள் பாடங்களை கற்றுக்கொள்ளலாம். எவ்வாறான முடிவு வந்தாலும் அனைத்துமே தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளுக்கான படிப்பினைதான்.

தேர்தல் கால வாக்குறுதிகளை நம்பிச் செயல்படும் ஒரு தலைமுறையாக தமிழ் மக்கள் இருக்கப் போகின்றனரா அல்லது புதிதாக சிந்தித்து தங்களுக்காக செயல்படும் ஓர் அரசியல் சமூகமாக தமிழினம் இருக்கப் போகின்றதா என்னும் கேள்விக்கான பதில்தான் - தமிழ்ப் பொது வேட்பாளர். தங்களுக்கான அரசியலை புரிந்து கொண்டு செயலாற்றும் திறன் கொண்ட ஒரு சமூகத்தால் மட்டுமே நிமிர்ந்தெழ முடியும் - அவ்வாறானதோர் அரசியல் சமூகமாக தமிழ் மக்கள் இருக்கப் போகின்றனரா அல்லது இல்லையா என்பதற்கான பதிலாகவே இந்த ஜனாதிபதித் தேர்தல் அமையும்.

## நல்லூரான் திருவடி - 11

# ஆச்சிரம குடிசையிலிருந்தே நாகபாம்புகளை விரட்டிய யோகர்!

**எஸ். கே. பாலசுப்பிரமணியம்**



எங்கள் வீட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைக்குள்ளிருந்து ஒரு நாள் நிறையவே நாகபாம்புக் குட்டிகள் தென்பட்டன. அச்சம் மேலிட்டவர்களாக நாம் செய்வதறியாது இருந்தோம். அந்த மூட்டைக்குள் மட்டுமல்ல. அவற்றின் மீதிருந்த சாக்குகள் சிலவற்றை உதறிய போது அவற்றினுள்ளேயும் பாம்புக் குட்டிகள் பல படமெடுத்தாடியவையாகத் தென்பட்டன. வேறு சில சாக்குகளை அகற்றியபோது அவற்றினுள்ளிருந்தும் பாம்புக் குட்டிகள் வெளிப்பட்டன.

அவற்றைக் கண்டதும் எனது மனைவி மயக்கம் போட்டு வீழ்ந்துவிட்டார். இதையறிந்து அயலவர்கள் எமது வீட்டுக்கு வந்துவிட்டனர். வீட்டிலிருந்த பெட்டகத்தின் கீழ் ஒரு புற்றிருந்தது. அதற்குள்ளிருந்தே பாம்புக் குட்டிகள் வெளிவந்தன. அப்போது போத்தல்கள் சிலவற்றை மனைவி என்னிடம் தந்தார். அவற்றை ஒருவாறாக பின்னர் போத்தல்களுக்குள் பிடித்துப் போட்டேன். அச்சமயத்தில் இரு நாகங்கள் சீற்றத்தோடு அப்புற்றிலிருந்து வெளியே வந்தன. அப்போது “சிவசிவா” என்று கூறியபடி செய்வதறியாது நின்றேன்.

மண் வீடு. வீட்டுச் சுவருக்குள்ளேயும் பாம்புகள் இருந்தன. அவற்றையும் பிடித்து போத்தல்களுக்குள் போட்டேன். அவற்றை எவரும் அடிக்காமல் தடுத்தேன். அச்சமயம் இரவு நெடுநேரமாகிவிட்டது. அப்போது அந்த நேரத்தில் அவற்றை அராலிக் காட்டில் கொண்டு சென்று விடத்தீர்மானித்து, எனக்கு தெரிந்த ஒருவரிடம் காரில் எனக்கு உதவியாக வருமாறு கேட்டேன். ஆனால், அவர் அச்சத்தினால் மறுத்துவிட்டார். அப்போது எனது நிலைமையை அறிந்து அனுதாபப்பட்ட ஆசிரிய நண்பரொருவர் என்னோடு வருவதற்கு இணங்கினார். இரவு ஒன்பது மணியளவில் இருவருமாக அராலி காட்டுப்பகுதிக்கு சுமார் நான்கு அல்லது ஐந்து மைல்கள் தூரம்வரை சென்று, நாம் போத்தல்களில் அடைத்து வந்த பாம்புக் குட்டிகளை மிக அவதானத்தோடு திறந்துவிட்டோம். அவையும் பாய்ந்து புதர்களுக்குள் சென்றன.

மறுநாள் எனக்கு ஏற்பட்ட அந்த பயங்கரமான அனுபவத்தை யோகரிடம் முறையிட அவரது கொழும்புத்துறை ஆச்சிரமத்துக்குச் சென்றேன். “வீட்டுக்குள் சர்ப்பங்கள் சுவாமி” என்று கூறியபடி அவர் முன்பாக அழுதவாறு நின்றேன். படுக்கையில் கண்களை மூடியபடி இருந்த யோகர், வலது ஆள் காட்டி விரலை மட்டுமே வளைத்து ஏனைய நான்கு விரல்க ளையும் மடக்கி “வெளியே வெளிக்கிடு. போய்விடு. பொழுதுபட முன்னர் போய்விடு. சேட்டை விடாதே. என்னைப் போல் நீ ஒருத்தன் . உன்னைப்போல் நான் ஒருத்தன்” என்று எங்கேயோ பார்த்தபடி கூறிக்கொண்டிருந்தார்.

இதன்பின்னர் “இந்தன் பிள்ளையார் கோவிலுக்கு போ. பயப்படாதே . கொஞ்சம் பொறுத்திரு. சூரியனைக் கும்பிடு. உன்னை ஒன்றும் செய்யாது போ” என்றார் யோகர். நானும் வீடு திரும்பினேன்.

முன்னர் வீட்டுக்குள் இருந்த பாம்பு புற்றொன்றை மூடினேன். மூடிய தகரம் விலக்கப்பட்டிருந்தது. யோகர் “போ போ” என்று உரக்கக்கூறிய தருணம் புற்றை மூடியிருந்த தகரம் விலகி, அப்புற்றின் மண்கட்டிகளும் தூள்தூளாக சிதைந்து, அதனுள்ளிருந்த அரவங்களும் வெளியேறியிருந்ததை உணர்ந்தேன்.


சுவாமிகளை நினைத்து அன்று தொடக்கம் தினந்தோறும் சிவபுராணம் படிக்க ஆரம்பித்தேன். ஐந்து அல்லது ஆறு மாதங்களின் பின்னர் குடும்பத்தவரோடு சுவாமிகளிடம் சென்றேன். சுவாமிகள் முன்பாக அரைவட்ட வடிவிலமர்ந்தோம். “பாம்பு மீண்டும் வந்ததா?” என்று யோகர் கேட்டார். வரவில்லை சுவாமி என்று கூறினேன். இதன்பின்னர் சுவாமிகளை வணங்கி அவரிடமிருந்து வீடு செல்ல விடைபெற்றுக் கொண்டோம்.

இதன்பின்னர் நாமிருந்த வீட்டிலிருந்து வெளியேறி, வேறு வீட்டில் குடியேறினோம். குருபரன் எம்மோடு தோன்றாத் துணையாக இருந்து வருவதை உணர்ந்து நின்றோம்.

**தொகுப்பு: அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**இடபம்**
இதுவரை இருந்த அலைச்சல் நீங்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். சில வேலைகளை விட்டுக்கொடுத்து முடிப்பீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களால் மறைமுகப் பிரச்னைகள் வரும்.

**கடகம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள்.

**சிம்மம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும்.

**கன்னி**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. சிந்தனை திறன் வெளிப்படும் நாள்.

**துலாம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமுக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த பணம் வந்து சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**மகரம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். மன இறுக்கங்கள் உருவாகும். நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**கும்பம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும்.

**மீனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

# விஜய் கட்சியின் கொடி 22ஆம் திகதி அறிமுகம்

சென்னை, ஒக. 19

நடிகர் விஜய் தொடங்கியுள்ள தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் கொடியை எதிர்வரும் 22ஆம் திகதி அவர் சென்னையில் அறிமுகம் செய்யவுள்ளார்.

விஜய் கடந்த பெப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை தொடங்கினார். இந்த நிலையில், விஜய் தனது முதல் அரசியல் மாநாட்டை



மிகப்பிரமாண்ட மாக நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

விக்கிரவாண்டி அருகே சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையோரம் உள்ள காணியில் தேசிய மாநாட்டை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மாநாட்டுக்கு முன்பு கட்சியின் கொடியை 22ஆம் திகதி பனையூரில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நிர்வாகிகள் முன்னிலையில் விஜய் அறிமுகம் செய்யவுள்ளார். (எ)

# இந்தியாவின் 2ஆவது பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு வளர்ச்சி

## முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

காஞ்சிபுரம், ஒக. 19

இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு வளர்ச்சி பெற்றுள்ளது என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார்.

காஞ்சிபுரம், சிறீ பெரும்புதூர் அருகே மகளிர் தங்கும் விடுதிக்கான கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடந்த 2021 ஆம் ஆண்டு தி. மு. க. ஆட்சி பொறுப்பேற்றதும் தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தோம்.

2030ஆம் ஆண்டுக்குள், ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டொலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு வளர்ச்சியடைய வேண்டும் என்று நான் ஓர் இலட்சிய இலக்கை நிர்ண



யித்திருக்கிறேன். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சிறப்பான செயல்பாடுகள், அந்த இலக்கை நாம் விரைவாக எட்டுவோம் என்று நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது - என்றார். (எ)

# கருணாநிதி ஓர் உயர்ந்த ஆளுமை

## பிரதமர் மோடி புகழாரம்

சென்னை, ஒக. 19

கருணாநிதி இந்திய அரசியல், இலக்கியம் மற்றும் சமூகத்தில் ஓர் உயர்ந்த ஆளுமை. அவர் தமிழகத்தின் வளர்ச்சி, நாட்டின் முன்னேற்றம் ஆகியவற்றில் எப்போதும் நாட்டம் கொண்டிருந்தார்.

- இவ்வாறு முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவம் பொறித்த நாணய வெளியீட்டு விழா குறித்து முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு பிரதமர் நரேந்திர மோடி எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் பல தசாப்தங்களாக மக்களால் பலமுறை தெரிவு செய்யப்பட்ட ஒரு முதலமைச்சராக நமது நாட்டின் வரலாற்றில் அழியாத முத்திரையை பதித்தவர் கருணாநிதி என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.

கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழா குறித்த அறிவிப்பு மகிழ்ச்சியளிக்கிறது. இந்தியாவின் தலைசிறந்த புதல்வர்களில் ஒருவரான கருணாநிதியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் முக்கியமான தருணம் இது.

ஓர் அரசியல் தலைவராக, சமூகம், கொள்கை மற்றும் அரசியல் பற்றிய ஆழமான புரிதலை அடிக்கோடிட்டுக் காட்டி, ஒரு முதலமைச்சராக நமது நாட்டின் வரலாற்றில் அழியாத முத்திரையை பதித்தவர் கருணாநிதி.

கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழா மாபெரும் வெற்றியடையட்டும் - என்று மோடி அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# கோவில் சொத்துகளை தி. மு. க. அரசு திட்டமிட்டு அழிக்கிறது!

## இந்து முன்னணி குற்றச்சாட்டு

சென்னை, ஒக. 19

கோவில் சொத்துகளை தி. மு. க. அரசு திட்டமிட்டு அழிக்கிறது என்று இந்து முன்னணி குற்றஞ்சாட்டிள்ளது.

இது தொடர்பில் இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னை அயனாவரம் அகத்தீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான 4 ஏக்கர் இடத்தில், கொளத்தூர் மீன் சந்தையை அமைப்பது குறித்து தமிழக அமைச்சர்கள் ஆய்வு செய்துள்ளனர். கோவில் இடத்தை அரசின் திட்டங்களுக்குப் பயன்படுத்த எதிர்ப்புத் தெரிவித்து, பக்தர்கள் வழக்குத் தொடர்ந்துள்ளனர். ஆனால், நீதிமன்றம் வணிக நோக்கத்தை மட்டுமே கவனத்தில் கொண்டு, வழக்கை தள்ளுபடி செய்துள்ளது. தி. மு. க. அரசு பதவியேற்றதில் இருந்து பல்வேறு வழிகளில் கோவில் சொத்துகளை திட்டமிட்டு அழித்து வருகிறது. கோவில் சொத்துகளை ஆன்மீகப் பணிக்காகவும், பக்தர்கள் வசதிக்காகவும் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# 13 மீனவர்கள் சென்னை திரும்பினர்


சென்னை, ஒக. 19


இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 13 பேர் தாயகம் திரும்பினர். கடந்த ஜூன் 30ஆம் திகதி இவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர்.


இந்த நிலையில், விடுதலை செய்யப்பட்ட பாம்பனை சேர்ந்த 7 மீனவர்கள், புதுக்கோட்டையைச் சேர்ந்த 6 மீனவர்கள் என மொத்தம் 13 பேர் கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு சென்னை திரும்பினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரேறி அருள்பாலித்தான் சந்நிதியான்...!





படங்கள் : வி. ஜெகன்

## 17 வயது சிறுமிமீது சிறியதந்தை உட்பட மூவர் கூட்டு வன்புணர்வு

வடமராட்சி, ஓக. 19

17 வயதான - மனவளர்ச்சி குன்றிய சிறுமியை கூட்டாக பாலியல் வன்கொடுமை செய்த மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சிறுமியின் சிறிய தந்தையும் அவரின் நண்பர்கள் என்று கூறப்படும் நபர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நெல்லியடி - துன்னாலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

சிறுமி வயிற்றுவலியால் பாதிக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பரிசோதனையில் அவர் இரு மாத கர்ப்பம் என்பது தெரிய வந்தது. அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் சிறுமியை சிறிய தந்தை உட்பட மூவர் கூட்டாக பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியமை தெரிய வந்தது.

தாயின் சகோதரியின் கணவரான 34 வயது நபரே சிறுமியை காதலிப்பதாகக் கூறியுள்ளார். இதை ஏற்க சிறுமி மறுத்துள்ளார். இந்த நிலையில், அவரை வன்புணர்ந்துள்ளார். அந்த நேரம் சிறுமியின் தாயார் புற்றுநோய்க்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

சிறுமியை வன்கொடுமை செய்த குறித்த நபர் இந்த விடயத்தை தனது நண்பர்கள் என்று கூறப்படும் 21, 22 வயதான இளைஞர்களிடம் கூறியுள்ளார்.

இதையடுத்து, அந்த இளைஞர்களும் சிறுமியை மிரட்டி வன்புணர்ந்துள்ளனர். கடந்த 2023 நவம்பர் தொடக்கம் இந்த மாதம் வரை மூவரும் சிறுமியை மிரட்டி வன்புணர்ந்துள்ளனர். இந்த நிலையில், அண்மையில் மூவரும் ஆபாசப்படத்தை சிறுமிக்கு காட்டி கூட்டாக வன்புணர்ந்துள்ளனர். அத்துடன், இந்த சம்பவத்தை யாரிடமாவது கூறினால் வெட்டுவோம் என்று கூறியும் மிரட்டியுள்ளனர்.

இந்த நிலையிலேயே சிறுமி கர்ப்பமடைந்துள்ளார். மருத்துவமனை நிர்வாகம் பொலிஸாருக்கு அளித்த தகவலின் அடிப்படையில் சிறுமி வழங்கிய வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு சந்தேக நபர்கள் மூவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட மூவரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## ரணிலுக்கு ஆதரவாக தீவகத்தில் பிரசாரம்!

யாழ்ப்பாணம், ஓக. 19

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரம் தீவகத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினரே இந்த பிரசாரத்தை ஆரம்பித்துள்ளனர்.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு பகுதிகளிலேயே இந்தப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

## திடீர் சுகயீனத்தால் கைதி ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்தார்.

நீதிமன்ற உத்தரவில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கொழும்பு 12ஐ சேர்ந்த 44 வயதுடைய நபரே உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை திடீர் சுகயீனம் காரணமாக மூச்சுவிட சிரமப்பட்ட நிலையில் அவர் யாழ் . போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார். (ஐ)

## காணாமலாக்கப்பட்டோர் குறித்து யாழ்ப்பாணத்தில் விசாரணைகள்!

யாழ்ப்பாணம், ஓக. 19

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

காணாமல் போனோர் தொடர்பான பணிமனை (ஓ. எம். பி.) யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், சங்கானை, காரைநகர், நல்லூர், சாவகச்சேரி, சண்டிலிப்பாய், நெடுந்தீவு, ஊர்காவற்துறை, வேலணை பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய விசாரணைகள் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டன.

முன்னதாக, கடந்த வெள்ளிக்கிழமை உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இந்த விசாரணைகள் ஆரம்பமாகின. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் விசாரணைகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூலிப்படையாக செயல்பட்ட மூவர் கைது

வடமராட்சி, ஓக. 19

வல்வெட்டித்துறையில் பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 5 வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், வன்முறைக்கு பயன்படுத்தப்பட்ட 2 மோட்டார் சைக்கிள்களை மீட்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவின் உத்தரவுக்கமைய யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அண்மையில், 2 மோட்டார் சைக்கிள்களில் சென்ற 6 பேர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டனர். இதனால் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பாக 19 மற்றும் 23 வயதான கோண்டாவிலை சேர்ந்த இருவரும் அச்சுவேலியை சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசாரணையில் டுபாயில் இருந்து கிடைத்த உத்தரவுக்கு அமையவே வீட்டை தாக்கியதாகவும் தாம் கூலிப்படையாக இயங்கியதாகவும் அவர்கள் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குத்தொடுவாயில் நாளை ஆர்ப்பாட்டம்!

முல்லைத்தீவு, ஓக. 19

**கொக்குத்தொடுவாய் புதைகுழி அருகே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நாளை செவ்வாய்க் கிழமை கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.**

முல்லைத்தீவு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி தலைவி மரிய சுரேஷ் ஈஸ்வரி இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தவை வருமாறு,

“கொக்குத்தொடுவாய் புதைகுழி விடயத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு எதிராகவே காணாமல் போனோர் தொடர்பான பணிமனை (ஓ. எம். பி.) அதிகாரிகள் நடந்து கொண்டனர். அவர்களின் செயல்பாடுகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை அச்சுறுத்துவதாகவே அமைந்தன. அத்துடன், அரசாங்கத்தை காப்பாற்றும் வகையில் ஓ. எம். பி. அதிகாரிகள் செயல்பட்டனர்.

“கொக்குத்தொடுவாய் புதைகுழி மூடப்பட்டமை எமக்கு அதிர்ச்சி அளிக்கிறது. இதனை சூழ இன்னமும் புதை குழிகள் இருக்கலாம் என்ற சந் தேகம் எமக்கு உள்ளது. எனவே, இவற்றைக் கண்டித்து செவ்வாய்க் கிழமை கவன வீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது. இதில், அனைவரும் பங்கேற்க வேண்டும்.”, என்றும் அழைத்துள்ளார். (ஐ)

# 48 குற்ற சந்தேகநபர்களுக்கு சர்வதேச பிடியாணை உத்தரவு

கொழும்பு, ஓக. 19

சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்ட 48 பேருக்கு சிவப்பு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கைது செய்யப்பட்ட 6 பேர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

சர்வதேச சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்ட பாதாள உலகக்குழு உறுப்பினர்களில் 28 பேர் டுபாயிலும் 11 பேர் இந்தியாவிலும் மூவர் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி நாடுகளிலும் தங்கியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டவர்களில் கனேமுல்ல சஞ்சீவ, ஹரக் கட்டா, மிதிகம ருவன், குடு சலிந்த, மன்னா ரமேஷ் மற்றும் பாபி ஆகிய 6 பேர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)





வரலாற்று பெருமைமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சப்பைரதத் திருவிழா நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றவேளை...!

# ரணிலுக்கே ஆதரவு இ. தொ. கா அறிவிப்பு

கொழும்பு, ஓக. 19

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப் போவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

நேற்று நடந்த ஊடக மாநாட்டில் இ. தொ. கா. தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், கட்சியின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், கட்சியின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். ராமேஷ்வரன் ஆகியோர் இணைந்து இதனை அறிவித்தனர்.

கட்சியின் தேசிய சபை கூடி ஆராய்ந்த பின்னர் இந்த முடிவு எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மொட்டுக் கட்சியின் திட்டங்களுக்கு கோட்டாவின் பலவீனமே தடையானது!

**திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பி.**

கொழும்பு, ஓக. 19

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பலவீனமான அம்சமே மொட்டுக் கட்சியின் திட்டங்களுக்கு தடையாக அமைந்தது என்று பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கட்சி பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மகிந்த ராஜபக்ஷவின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை கடந்த காலங்களில் வேறு எந்த தலைவர்களும் கண்டுகொள்ளவில்லை. பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவால் மட்டுமே அந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியும். கோட்டாபய ராஜபக்ஷவிடம் பலவீனமான ஓர் அம்சம் காணப்படுகிறது. ஆனால், அதை அப்படியே விட்டுவிட முடியாது.

மகிந்த ராஜபக்ஷ செய்த பணிகளை கோட்டாபய செய்யாவிட்டாலும் அவரை வெற்றிகரமான தலைவராக நாம் பார்க்கிறோம். இதற்கமைய ராஜபக்ஷவின் கொள்கைகளை முன்னெடுத்து செல்வதற்கு மிகவும் பொருத்தமானவர் அவரின் மகன் நாமல் ராஜபக்ஷ. எனவே, நாமல் ராஜபக்ஷவை கட்சி வேறுபாடின்றி ஜனாதிபதியாக்க வேண்டும் - என்றார். (ஐ)

# மத வழிபாட்டு தலங்களில் பொதுவேட்பாளர் வழிபாடு!

யாழ்ப்பாணம், ஓக. 19

தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன் நேற்று ஞாயிற்றுக்கிழமை மத வழிபாட்டு தலங்களுக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

தந்தை செல்வா நினைவு சதுக்கத்துக்கு சென்ற பொது வேட்பாளர் மற்றும் குழுவினர் தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

அதனை தொடர்ந்து, நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டதுடன், நல்லை ஆதீன குரு முதல்வரை சந்தித்தும் ஆசி பெற்றனர். பின்னர், கத்தோலிக்க தேவாலயத்திலும் வழிபட்டிருந்தார். (ஐ)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஓக. 19

உருவ ஒற்றுமையால் இலக்கு வைக்கப்பட்ட நபருக்கு பதிலாக வேறொருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார் என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் - சிறீ புரம் - காவன்திஸ்ஸபுரத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெளிநாட்டிலிருந்து போதைப்பொருள் வலையமைப்பு ஒன்றை இயக்கி வரும் ஒருவர், தனது மனைவியின் காதலன் என்று கூறப்படும் நபரை கொலை செய்வதற்காக கூலிப்படை நபரை ஒப்பந்தம் செய்துள்ளார்.

இந்த நிலையில், இலக்கு வைக்கப்பட்ட நபருக்கு பதிலாக வேறொரு நபர் சுட்டுக் கொல்லப்பட்டார். உருவ ஒற்றுமையே இந்தத் தவறுதலான கொலைக்குக் காரணமாக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைக்கு ரி - 56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மாடுகளுக்கு காவலிருந்த இளம்குடும்பஸ்தர் மரணம்!

முல்லைத்தீவு, ஓக. 19

மாடுகளுக்குக் காவல் இருப்பதற்கு இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - மன்னாகண்டல் பகுதியில் நேற்று காலை அவரின் சடலம் மீட்கப்பட்டது. 28 வயதுடைய கந்தையா மோகனதாஸ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

மாடுகளுக்குக் காவல் காப்பதற்காக சென்றவர் அங்கிருந்த கொட்டிலில் உறக்கத்திலிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளார். (ஐ)

# கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயப் பெருவிழா



வடமராட்சி, ஓக. 19

வடமராட்சி கிழக்கு கப்பலேந்தி மாதா ஆலயத்தின் பெருவிழா கடந்த வியாழக் கிழமை நடைபெற்றது.

புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவ கல்லூரி அதிபர் அருட்தந்தை தயாபரன் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுத்தல் ஆரம்பமானது.

திருவிழா திருப்பலியில் அருட்தந்தை பத்திநாதர் அடிகளார் அருட்தந்தை ரமேஷ் அ. ம. தி, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் அருட்தந்தை ஜெயரஞ்சன் அடிகளார், புனித பிரான்சிஸ் சவேரியார் குருமட விரிவுரையாளர் அருட்கலாநிதி கபில்ராஜ் அடிகளார், கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய பங்குத்தந்தை அமல்ராஜ் அடிகளார் ஆகியோரும் பங்கேற்றனர்.

திருவிழா நிறைவில் அன்னை மரியாள் ஆலயத்திலிருந்து பவனியாக புறப்பட்டு கடற்கரை வீதியூடாக வலம் வந்தார். இந்த ஊர்வலத்தில் பெருந்திரளான மக்கள் பங்கேற்றனர். (ஐ-ஐ)

# இலஞ்சம் வாங்கிய 3 பொலிஸார் கைது

கொழும்பு, ஓக. 19

கசிப்பு விற்ற நபரிடமிருந்து 6 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாக பெற்ற பொலிஸ் அதிகாரிகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி - பெந்தோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகள் மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இலஞ்சம் வழங்கியவர் தனது கைபேசியில் மூவருக்கும் இலஞ்சமாக பணம் கொடுப்பதை காணொலியாக பதிவு செய்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ளார். இதையடுத்தே அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இராஜதந்திரி ஹிமாலிக்கு எதிராக ஆஸி. பெடரல் நீதிமன்றம் தீர்ப்பு!

கொழும்பு, ஓக. 19

**இராஜதந்திரியான ஹிமாலி அருண திலக தனது வீட்டுப் பணிப்பெண்ணுக்கு விடுமுறை வழங்காது தொடர்ச்சியாக பணியாற்ற வைத்ததுடன், அவருக்கான ஊதியமும் வழங்காமல் ஏமாற்றினார் என்பது நீதிமன்ற தீர்ப்பு மூலம் வெளிப்பட்டுள்ளது.**

ஹிமாலி அருண திலக அவுஸ்திரேலியாவில் பிரதி தூதுவராக பணியாற்றியபோது தன்னிடம் பணியாற்றிய பிரியங்கா தனரத்னவுக்கு 5 இலட்சத்து 43 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்களை வழங்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய பெடரல் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

தற்போது, ஐ. நா. மனித உரிமைகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக தற்போது பணியாற்றும் ஹிமாலி அருணதிலக, கடந்த 2015 - 2018 வரையான காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவுக்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராக பணியாற்றினார். அப்போது ஹிமாலி அருணதிலகவின் கன்பரா இல்லத்தில் வீட்டுப்பணிப்பெண்ணாக இலங்கையை சேர்ந்த பிரியங்கா தனரத்ன இணைந்து கொண்டார்.

அங்கு மூன்று வருடங்களாக வாரத்தில் ஏழு நாட்களும் பணியாற்றிய பிரியங்காவுக்கு, மூன்று ஆண்டுகளில் இரு நாட்கள் மாத்திரமே ஓய்வு வழங்கப்பட்டிருக்கின்றது. அதுவும் உணவு சமைக்கும் போது அவரது கையில் தீக்காயம் ஏற்பட்டதாலேயே அந்த ஓய்வு வழங்கப்பட்டதாக சிட்னியை தளமாகக் கொண்டு இயங்கிவரும் சட்டத்தரணி டேவிட் ஹிலார்ட் தெரிவித்திருக்கிறார்.

அங்கு பணியாற்றிய, பிரியங்காவுக்கு 11 ஆயிரத்து 212 டொலர்கள் மட்டுமே ஊதியமாக வழங்கப்பட்டுள்ளன. பிரியங்கா அவுஸ்திரேலியாவில் பணியாற்றத் தொடங்கிய 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வாரமொன்றில் 36 மணிநேர பணிக்கான தேசிய மட்டத்திலான குறைந்தபட்ச ஊதியம் 656.90 டொலர்கள் எனவும் டேவிட் ஹிலார்ட் சுட்டிக் காட்டியிருக்கிறார். அனுமதிக்கப்பட்ட நேரத்தை விட அதிக நேரம் பணியாற்ற வைத்தமை "நவீன அடிமைத்துவத்துக்கு" சிறந்த உதாரணம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நிலையில், அவுஸ்திரேலிய பெடரல் நீதிமன்றத்தில் நியாயமான ஊழியச் சட்டத்தின்கீழ் ஹிமாலி அருணதிலகவுக்கு எதிராக நடந்த வழக்கு விசாரணை முடிவில் ஊழியர் சட்டம் மீறப்பட்டமை உறுதியானது. இதனால், அவர் பிரியங்காவுக்கு செலுத்த வேண்டிய 3 இலட்சத்து 74 ஆயிரம் டொலர் நிலுவைச் சம்பளத்துடன், வட்டியாக ஒரு இலட்சத்து 69 ஆயிரம் டொலரைச் சேர்த்து மொத்தமாக 5 இலட்சத்து 43 ஆயிரம் டொலர்களை பிரியங்கா தனரத்னவுக்கு செலுத்துமாறு அவுஸ்திரேலிய பெடரல் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

எனினும், இது தொடர்பில் விளக்கமளித்துள்ள வெளிவிவகார அமைச்சு, "அந்தப் பணிப்பெண்ணுக்கு அமைச்சின் ஊடாக அனுமதியளிக்கப்பட்டு, இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவு முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது. அவர் (பிரியங்கா) ஹிமாலி அருண திலக நாடு திரும்புவதற்கு முன்பதாக உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து இரகசியமாக வெளியேறினார்", என்றும் கூறியுள்ளது. (ஐ)



# மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் அநுர வழிபாடு!

கொழும்பு, ஓக. 19

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயத்தில் நேற்று முன்தினம் வழிபாடாற்றினார்.

இதன்போது இந்து மதகுருமார்களுடன் கலந்துரையாடிய அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கான நல்லாசியை பெற்றுக்கொண்டார்.

இதில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்று பேரவை உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கலந்துகொண்டார். (ஐ)

# கம்மன்பில கட்சியினர் ரணிலுக்கு ஆதரவு!

கொழும்பு, ஓக. 19

உதய கம்மன்பிலவின் பிவிதுரு ஹெல உறுமய கட்சியை சேர்ந்த குழு ஒன்று ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் முன்னாள் பிரதி பொதுச் செயலாளர் உபுல் கோனார, உறுப்பினரான ஆராச்சிகும்புரே சோபித தேரர் ஆகியோர் கொண்ட குழுவே இவ்வாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

நெருக்கடி காலத்தில் அரசுக்கு ஆதரவளிக்குமாறு கட்சியின் தலைவர் உதய கம்மன்பிலவை தாம் கோரினர் என்றும் அதனை அவர் புறக்கணித்தமையால் தாம் ஜனாதிபதியை ஆதரிக்க தீர்மானித்தாக - அவர்கள் கூறினர். (ஐ)

# வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்ட செயல் வீரர் ரணில்!

## அமைச்சர் டக்ளஸ் பிரசாரம்

கொழும்பு, ஓக. 19

வீழ்ச்சியிலிருந்த நாட்டை மீட்சி பெறசெய்த செயல் வீரர் ரணில். அந்த வகையில் மீண்டும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். தற்கால சூழலுக்கு இதுவே சரியான முடிவு - இவ்வாறு கூறியுள்ளார் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அநுராதபுரத்தில் இயலும் சிறீலங்கா கூட்டணியின் பிரசார கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில், ரணில் விக்ரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்கு வாய்ப்பளிப்பதானது மக்கள் எதிர்பார்ப்பாக உள்ளது. இவரின் வெற்றியே கடந்த காலங்களிலிருந்து விடுபட்டு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்க மக்களுக்கும் நாட்டுக்கும் வாய்ப்பளிக்கும் ஒன்றாக இருக்கும்.

கடந்த இரண்டு வருடதுக்குள் ஜனாதிபதி ரணில் தன்னுடைய ஆற்றலால் தன்னுடைய செயல்பாட்டால் நாட்டுக்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கிறார். அதனால், அவருக்கு நாங்கள் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# கட்சியை காப்பாற்ற மகனை தவிர வேறு தெரிவு மகிந்தவிடம் இல்லை!

## ரவூப் ஹக்கீம் எம். பி.

கொழும்பு, ஓக. 19

ஊழல், மோசடி குற்றங்களிலிருந்து தம்மை பாதுகாக்கவே ரணிலை ராஜபக்ஷக்கள் ஜனாதிபதி ஆக்கினார்கள். ஆனால், அவர் பொதுஜன பெரமுன கட்சியையே நாசமாக்கி விட்டார். இன்று கட்சியை காப்பாற்ற மகிந்த ராஜபக்ஷ தனது மகனை தேர்தலில் களமிறக்கியுள்ளார். மகிந்தவுக்கு வேறு எந்தத் தெரிவுகளும் இல்லை - இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

களுத்துறை பண்டாரகமையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அறகலய போராட்டத்தின் பின்னர் ராஜபக்ஷக்கள் ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். எவ்வாறாயினும் சர்வதேச ரீதியில் எழுப்பப்படும் குறைகளை மற்றும் தவறுகளைத் தவிர்ப்பதற்காக "நாட்டின் தலைமை பொறுப்பை சஜித் பிரேமதாஸவுக்கு பொறுப்பேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், சஜித் பிரேமதாஸ அழைப்பை ஏற்று நாட்டைப் பொறுப்பெடுக்கவில்லை என்று ரணில் விக்கிரமசிங்க இன்றும் கூறுகிறார்.

ஆனால், அன்று ராஜபக்ஷர்கள் முயற்சி செய்தது நாட்டின் பொறுப்பை சஜித் பிரேமதாவிடம் ஒப்படைத்து - சஜித் பிரேமதாஸவை நாசமாக்கவே. அதுபற்றி நாங்கள் நன்றாகவே அறிந்திருந்தோம். "இந்தத் தருணத்தில் நாட்டின் தலைமைப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம்" என நாங்கள் கூறினோம்.

ஜே. ஆர். ஜெயவர்த்தன அனைத்து நீதிபதிகளையும் வீட்டுக்கு அனுப்பினார். ரணில் விக்கிரமசிங்க இன்று நீதிபதிகள் வழங்கும் தீர்ப்புகளை மீறிச் செயல்படுகிறார். சட்டத்தரணிகளுக்கும் நீதிமன்றங்களுக்கு இடையே சண்டையை உண்டு பண்ணவே ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார் - என்றும் கூறினார். (ஐ)

# திருடுவதற்கான கருத்துகளே அரசில் பரிமாறப்படுகின்றன!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 19

நாடொன்றை கட்டியெழுப்புவதற்கு தெளிவான வேலைத்திட்டங்கள் இருக்க வேண்டும். அரசாங்கம் ஒன்றுக்குள் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டத்துக்குக் கருத்துகள் பரிமாறப்பட வேண்டும் - கீழ் மட்டத்திலிருந்து மேல்மட்டத்துக்கு கருத்துகள் பரிமாறப்பட வேண்டும். இருந்தாலும் 24 மணித்தியாலமும், ஏழு நாட்களும் 365 நாட்களும் திருட்டை அடிப்படையாகக் கொண்ட கருத்துகள் கீழிருந்து மேல் வரை செல்கின்றது. ஊழலும் மோசடிகளும் திருட்டுத்தனமும் நாட்டில் காணப்படுகின்றன -என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

களுத்துறை பண்டாரகமையில் நடந்த பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு சஜித் ஆற்றிய உரையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இன்று பல தரப்பினர் ஒன்றிணைந்துள்ளனர். அதில் வைன் ஸ்டோர்ஸ், மதுபான அனுமதிப்பத்திரம் போன்ற வரப்பிரசாதங்களுக்கு அவர்களை பலியெடுத்துள்ளனர். நான் ஜனாதிபதியான பின்னர் அவ்வாறு மோசடியாகவும் இலஞ்சமாகவும் வழங்கப்பட்ட அனைத்து அனுமதிப் பத்திரங்களையும் இரத்து செய்வேன்.

அரசியல் இலஞ்சத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் சட்டத்தின் முன் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறான தவறுகளை செய்யாமல் சிந்தித்து செயல்படுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

எவரேனும் ஒருவர் கொள்கைத் திட்டத்துடனும் வழிகாட்டல்களுடனும் அரசியல் பயணங்களை முன்னெடுக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியுடனும் ஐக் கிய மக்கள் கூட்டமைப்புட னும் இணைந்து கொண்டிருக் கிற ஒவ்வொருவரும் பணத்துக்காகவும் ஊழலுக்காகவும் மோசடிகளுக்காகவும் இணையவில்லை. சிறந்த கொள்கை திட்டத்துடன் இணைந்து கொண்டிருக்கின்றனர. இந்த ஊழல்மிக்க திருட்டுத்தனமான அரசியலை நிறுத்த வேண்டும்.



இன்று சலுகைகளையும், வரப்பிரசாதங்களையும் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தில் உள்ளவர்கள் மாத்திரமே அனுபவிக்கின்றனர். ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மாத்திரமே அனைத்து சுகபோகங்களை அனுபவிக்கின்றனர். 220 இலட்சம் மக்களும் அநாதைகளாக கைவிடப்பட்டிருக்கின்றனர். தேர்தல் காலங்களில் பொய் வாக்குறுதிகளை வழங்கி இந்த முறையும் மக்களை ஏமாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இதன் பின்னரும் மக்கள் ஏமாறுவதற்கு தயாராக இல்லை - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த ஐந்து வயது சிறுவன் கடத்தல்!

**சிறுவனை மீட்ட மக்கள், கடத்தி சென்ற நபரை மடக்கிப்பிடித்து நையப்புடைப்பு**

வாகரை, ஒக. 19

**வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த ஐந்து வயது சிறுவனை கடத்தல்காரன் ஒருவர் கடத்தி, காட்டுக்குள் கொண்டு சென்றதையடுத்து, சிறுவனை மீட்டு, கடத்திய நபரை பிரதேச மக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.**

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை மட்டக்களப்பு, வாகரை பிரதேசத்தில் இடம்பெற்றது.

இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பான சூழ்நிலை நிலவுவதாகவும் கைதான நபரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 5 வயது சிறுவன் தாய், தந்தையுடன் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தபோது, அதிகாலை 3. 30 மணியளவில் சிறுவன் பால் கேட்க, சிறுவனின் தாயார் தந்தைக்கு பக்கத்தில் சிறுவனை விட்டுவிட்டு சமையலறைக்குச் சென்றுள்ளார்.

பின்னர், பால் போத்துலுடன் திரும்பி வந்து பார்த்த போது சிறுவனை காணாத நிலையில், அந்தப் பகுதி மக்கள் ஒன்றுதிரண்டு சிறுவனை தேடியுள்ளனர்.

இதன்போது சிறுவனை கடத்திக்கொண்டு நபரொருவர் காட்டுப் பகுதிக்கு செல்வதை கண்ட மக்கள் காட்டை சுற்றித் தேடியுள்ளனர்.

இந்த நிலையில், சிறுவனை காட்டில் விட்டுவிட்டு சந்தேக நபர் அந்தப் பகுதியில் ஒளிந்திருந்தபோது, அவரை பொது மக்கள் மடக்கிப் பிடித்து அடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததுடன் சிறுவனை மீட்டனர்.

கைது செய்யப்பட்ட இந்த நபர் வாழைச்சேனை செம்மண் ஓடை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என்றும் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும் தெரியவந்துள்ளது. இவர் ஏற்கனவே பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர். பதிவு செய்யப்பட்ட குற்றவாளிப் பட்டியலில் (ஐ. ஆர். சி) சேர்க்கப்பட்டவர் எனவும் போதைப் பொருள் வாங்க பணத்துக்காக சிறுவனை கடத்திப் பணம் பறிக்க முயற்சித்துள்ளதாகவும் சந்தேக நபர் தொடர்பான பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ)

# சிறீமன் நாராயணன் ஆலய சமுத்திர தீர்த்தோற்சவம்

காரைதீவு, ஒக. 19

அம்பாறை, காரைதீவு சிறீமன் நாராயணன் ஆலய அலங்கார உற்சவத்தின் சமுத்திர தீர்த்தோற்சவம் ஆலய பிரதம குரு சிவ சிறீ மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபை தலைவர் ம. ஜெகநாதன் தலைமையில் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகிறது.

கடந்த காலங்களைவிட சிறப்பாக பால்குட பவனி வேட்டைத் திருவிழா, வரலட்சுமி விரதம் மற்றும் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

இன்று திங்கட்கிழமை சமுத்திர தீர்த்தோற்சவம், வைரவர் பூஜையுடன் இவ்வருட திருவிழா நிறைவடையவுள்ளது. (எ)

# புவி வெப்பமடைதல் தொடர்பில் கல்முனையில் கலந்துரையாடல்

கல்முனை, ஒக. 19

புவி வெப்பமடைதல் தொடர்பாக சுகாதார பகுதி உத்தியோகத்தர்கள் ஊடாக பொதுமக்களை தெளிவுபடுத்தும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விழிப்புணர்வு கலந்துரையாடல், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகிலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது,


சுகாதார அமைச்சிலிருந்து வருகை தந்த மருத்துவர் இனோகா சுரவீர பிரதான வளவாளராக கலந்து கொண்டு, இந்த விழிப்புணர்வு நிகழ்வில், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

# அஷ்ரப் வித்தியாலய மாணவி வாசிப்பு போட்டியில் முதலிடம்

சாய்ந்தமருது, ஒக. 19

2024 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டியில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது லீடர் எம். எச். எம். அஷ்ரப் வித்தியாலய மாணவி கே. பாத்திமா நிஸ்கா முதலாம் பிரிவு வாசிப்பு போட்டியில் முதலாமிடத்தை பெற்றுள்ளார்.

இந்த மாணவி எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண மட்ட போட்டியில் கலந்து கொள்ளவுள்ளார். இந்த பாடசாலை 2024 இல் இணைப் பாடவிதான போட்டிகளில் பல வரலாற்று வெற்றிகளை பதிவு செய்துள்ளது. (எ)



# மாணவர்கள் கௌரவிப்பு



பட்டிருப்பு, ஒக. 19

மட்டக்களப்பு, பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பட்டிருப்பு தேசிய பாடசாலையில் பாடவிதான செயல்பாடுகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் எம். சபேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர் கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# வாகரை விபத்தில் சிக்கி 8 வயது சிறுவன் உயிரிழப்பு!

**வான் சாரதி பொலிஸாரால் கைது**

வாகரை, ஒக. 19

மட்டக்களப்பு, வாகரை பிரதான வீதியிலுள்ள பனிச்சங்கேணி பாலத்தில் வீதியை கடக்க முற்பட்ட 8 வயது சிறுவன், வான் மோதி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை மீராவோடையைச் சேர்ந்த 8 வயது சிறுவனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தான்.

இந்தச் சிறுவனுடன் அவனது தாயும் தந்தையும் ஓட்டோவில் நேற்று முன்தினம் இரவு பயணித்துக்கொண்டிருந்தபோது பனிச்சங்கேணி பாலத்தில் ஓட்டோவின் முன்பக்க மின்விளக்கு எரியாமல், பழுதடைந்துபோனதால், பாலத்தில் ஓட்டோவை நிறுத்திவிட்டு அதனை சிறுவனின் தந்தை சரி செய்துகொண்டிருந்துள்ளார்.

இந்த நிலையில் சிறுவனின் தாய் ஓட்டோவில் இருந்து இறங்கி பாலத்தின் எதிர்ப் பக்கமாக சென்றுள்ளார்.

அப்போது சிறுவன் வீதியின் குறுக்காக கடந்து தாயாரிடம் செல்ல முற்பட்டபோது வாகரையை நோக்கி பயணித்த வான் சிறுவனை மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த சிறுவன் வாழைச்சேனை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான்.

இதனையடுத்து வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கல்முனை வலயம் வரலாற்று சாதனை 22 போட்டிகளில் மாகாணத்துக்கு தெரிவு

திருக்கோவில், ஒக. 19

மாவட்ட மட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகளில் கல்முனை கல்வி வலயம் வரலாற்று சாதனை படைத்துள்ளது. வியாழக்கிழமை திருக்கோவிலில் நடைபெற்ற 38 அரங்கப் போட்டிகளில் 22 போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று மாகாணப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

38 போட்டிகளில் 37 போட்டிகளில் 22 முதலிடங்கள், 09 இரண்டாம் இடங்கள், 07 மூன்றாம் இடங்கள் அடங்கலாக முதல் மூன்று இடங்கள் கல்முனை கல்வி வலயத்துக்கு கிடைத்துள்ளன. கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீமின் தொடர் ஆலோசனை, வழிகாட்டல் மற்றும் நேரடிப் பங்குபற்றுதலால் கல்முனை வலயம் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளது. (எ)

# கடலுடன் சென்று கலக்கும் நீரை குளத்துக்கு வழங்கக் கோரிக்கை!

திருகோணமலை, ஒக. 19

கடலுடன் சென்று கலக்கும் நீரை குளத்துக்கு வழங்கி மக்களுடைய விவசாயத்துக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்காற்ற உதவுமாறு தென்னமரவடி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப்புற கிராமமாக இருக்கின்ற தென்னமரவடி கிராம மக்கள் அடிப்படை வசதிகள் பல பூர்த்தி செய்யப்படாத நிலையில் அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருவதாகவும், வாழ்வாதாரத்துக்காக மீன்பிடி மற்றும் விசாயத்தை பல சவால்களுக்கு மத்தியில் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

தென்னமரவடி கிராமத்தில் விவசாயத்தை வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டுவரும் மக்கள் விவசாயத்துக்கான நீர் இன்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த நீரை மறித்து, 150 மீற்றர் தூரத்தில் உள்ள தென்னமரவடி பறையன்வெளி குளத்துக்கு விடுவதன் மூலம் அதனை அண்டி இருக்கின்ற 50 ஏக்கருக்கு மேற்பட்ட வயல்வெளிகளில் விவசாயம் மேற்கொள்வதோடு, அங்கிருந்து ஏனைய சிறிய குளங்களான அகம்படியான் குளம், போட்டாக்குளம் போன்ற குளங்களை நிரப்பி அங்கிருக்கின்ற 200 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களில் இருபோக நெற் செய்கையிலும், உப உணவுப் பயிர்ச்செய்கையிலும், கால்நடை வளர்ப்பிலும் மக்கள் ஈடுபட முடியும். இதைவிட நிலத்தடி நீரையும் அதிகரிப்பதற்கு இது வாய்ப்பாக அமையும் என்று மக்கள் கூறினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றில் ஆளும் - எதிர்க்கட்சி எம். பிக்கள் இடையே கடும் மோதல்!



அங்காரா, ஒக. 19

**துருக்கி பாராளுமன்றத்தில் எம். பிக்கள் ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கிக் கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பான காணொலிகள் இணையத்தில் வேகமாக பரவி வருகின்றன.**

துருக்கி பாராளுமன்ற கூட்டத்தொடர் நடைபெற்று வந்த நிலையில், சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குறித்து நடந்த விவாதத்தின்போது கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது, எதிர்க்கட்சி - ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மோதலில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

துருக்கியின் தொழிலாளர் கட்சியின் எம். பியான அஹ்மத் சிக், ஜனாதிபதி எர்டோகன் தலைமையிலான ஏ. கே. கட்சியின் உறுப்பினர்களை அவமதித்ததில் இருந்து மோதல் தொடங்கியது. அஹ்மத் சிக் உரையாற்றும்போது, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் குழப்பத்தில் ஈடுபட்டனர். இதனால் இரு தரப்பினரும் மோதிக்கொண்ட நிலையில், பிற உறுப்பினர்கள் தலையிட்டு அவர்களை அமைதிப்படுத்தினர்.

கடந்த 2013ஆம் ஆண்டில் துருக்கி நாட்டில் நடைபெற்ற போராட்டத்தில், அரசை கவிழ்க்க முயற்சித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் அடலே மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இது குறித்த விசாரணையில் 2022 ஆம் ஆண்டு அவருக்கு 18 ஆண்டுகால சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அடலே சிறையில் இருந்தாலும், கடந்த 2023ஆம் ஆண்டு மே மாதம் துருக்கி தொழிலாளர் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி வந்த நிலையில், அதன் வாயிலாக பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். பாராளுமன்றத்தில் சிறை தண்டனை குற்றவாளி என அவரின் பொறுப்பு பறிக்கப்பட்ட நிலையில், நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில், அடலேவின் தகுதி நீக்கம் செல்லாது என அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனிடையே அவரை பாராளுமன்ற அவைக்குள் அனுமதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன.

இந்த விடயம் தொடர்பான விவாதத்தில் எதிர்க்கட்சியை சேர்ந்தவர்களை ஆளுங்கட்சியினர் தீவிரவாதிகள் என அழைத்தனர். எதிர்க்கட்சியை பயங்கரவாத அமைப்பு என்று அழைத்த, ஆளும் கட்சியினரின் பேச்சை சுட்டிக்காட்டி பதில் வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர் அஹ்மத் சிக், "உங்களின் பக்கம் நிற்காத நபர்களை தீவிரவாதிகள் என அழைப்பதைப் போல, அடலேவை நீங்கள் தீவிரவாதி என அழைப்பதில் எங்களுக்கு ஆச்சரியம் இல்லை" என தெரிவித்தார்.

பின்னர் ஆளும் கட்சி உறுப்பினர்களால், அஹ்மத் சிக், தரையில் தள்ளப்பட்டு பல முறை தாக்கப்பட்டார். இந்த மோதலின் போது இரண்டு எதிர்க்கட்சி எம். பிக்கள் காயமடைந்தனர். அத்தோடு, ஒரு பெண் உறுப்பினரும் தாக்கப்பட்டார். மோதல் வலுத்ததை அடுத்து சபாநாயகரின் மேடையில் இரத்தத் துளிகள் படிந்தன. இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் சபாநாயகர் 3 மணிநேரம் அவையை ஒத்திவைத்து உத்தரவிட்டார். (எ)

# பைபிள் விற்று ட்ரம்புக்கு ரூ. 10 கோடி வருமானம்!



வாஷிங்டன், ஒக. 19

பைபிள் விற்பனை மூலம் டொனால்ட் ட்ரம்புக்கு 10 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், வேட்பாளர்களின் சொத்து விவரங்களை அமெரிக்க தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டு வருகிறது. இதன்படி ரியல் எஸ்டேட் முதல் கிரிப்டோகரன்ஸி வரையில் பல தளங்களில் ட்ரம்ப் முதலீடு செய்துள்ளார். அவர் வசமுள்ள கிரிப்டோகரன்ஸியின் பெறுமதி 10 இலட்சம் டொலராகும். அதேபோன்று, பைபிள் விற்பனை மூலம் 3 இலட்சம் டொலர் (இலங்கை பெறுமதியில் 10 கோடி ரூபாய்) வருமானம் ஈட்டியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சிரியாவுக்கு 1, 400 கிலோ புற்றுநோய் எதிர்ப்பு மருந்து

## இந்தியா மனிதாபிமான உதவி

புதுடெல்லி, ஒக. 19

மனிதாபிமான உதவியாக சிரியாவுக்கு இந்தியா 1,400 கிலோ புற்றுநோய் எதிர்ப்பு மருந்தை அனுப்பியுள்ளதாக மத்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவும் சிரியாவும் நட்பு நாடுகள் ஆகும். சிரியாவில் நீடித்த உள்நாட்டுப் போரின் போது இந்தியத் துதரகம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருந்தது. சிரியாவின் இளைஞர்களின் மேம்பாட்டுக்கு இந்தியா குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது.

இந்த நிலையில், சிரியாவுக்கு மருத்துவ ரீதியாக உதவும் நோக்கில், புற்றுநோய் எதிர்ப்பு மருந்தை இந்தியா அனுப்பியுள்ளது. (எ)

# கனடா தொழிலதிபர் ராணாவை இந்தியாவிடம் ஒப்படையுங்கள்!

## அமெரிக்க நீதிமன்றம் உத்தரவு



வாஷிங்டன், ஒக. 19

மும்பை தாக்குதல் வழக்குடன் தொடர்புடைய தஹாவூர் ராணாவை இந்தியாவிடம் ஒப்படையுங்கள் என்று அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி இந்தியாவின் மும்பையின் பல்வேறு பகுதிகளில் பாகிஸ்தானின் லஷ்கர் - இ - தொய்பா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 175 பேர் உயிரிழந்தனர்.

மும்பை தாக்குதல் சம்பவத்தில் பாகிஸ்தான் வம்சாவளியை சேர்ந்த கனடா தொழிலதிபர் தஹாவூர் ராணாவுக்கு தொடர்பு இருப்பது விசாரணையில் தெரியவந்தது. மும்பை தாஜ் ஹோட்டலில் அவர் தங்கியிருந்து, அந்த ஹோட்டல் குறித்த முழுமையான விவரங்களை தீவிரவாதிகளுக்கு வழங்கினார். இதன் அடிப்படையிலேயே தாஜ் ஹோட்டலில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

கடந்த 2009ஆம் ஆண்டு ஒக்டோபரில் தஹாவூர் ராணா அமெரிக்காவில் கைது செய்யப்பட்டார். கடந்த 2013ஆம் ஆண்டில் அமெரிக்காவின் சிகாகோ நீதிமன்றம் அவருக்கு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. இந்தச் சூழலில் மும்பை தாக்குதல் வழக்கு தொடர்பில் ராணாவிடம் விசாரணை நடத்த அவரை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும் என்று மத்திய அரசு கோரியது. இதனை அமெரிக்க அரசு ஏற்றுக் கொண்டது. (எ)

# சூடானில் தாக்குதல் 85 பேர் உயிரிழப்பு!



கார்டூம், ஒக. 19

சூடானில் போரால் பாதிக்கப்பட்ட தென்கிழக்கில் உள்ள ஒரு கிராமத்தில் துணை இராணுவப் படைகள் நடத்திய தாக்குதலில் 85 பேர் உயிரிழந்தனர்.

சென்னார் மாநிலத்தில் உள்ள ஜல்கினி கிராமத்தின் மீதே இந்தத் தாக்குதல் இடம் பெற்றது.

சூடானில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இராணுவத்துடன் போரிட்டு வரும் துணை இராணுவப் படையினர் சென்னார் மாநிலத் தலைநகரான சின்ஜாவை ஜூன் மாதம் கைப்பற்றியது.

இந்த நிலையில், சின்னார் மாநிலத்தில் இடம்பெறும் தாக்குதல்கள் காரணமாக 7 இலட்சத்து 25,000இற்கும் அதிகமான மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் இடப்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் சமீபத்திய ஐ. நா. தரவுகளின்படி, சூடானிலிருந்து சுமார் 22 இலட்சம் மக்கள் வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ)



# தாய்லாந்தின் பிரதமராக 37 வயது பெண் தெரிவு

பாங்கொக், ஒக. 19

தாய்லாந்தின் புதிய பிரதமராக அந்த நாட்டின் முன்னாள் பிரிவினைவாத தலைவராக அறியப்படும் தக்ஸின் ஷினவத்ராவின் இளைய மகள் பேடோங்தரன் தக்ஸினை பாராளுமன்றம் தெரிவு செய்துள்ளது.

ஷினவத்ராவின் குடும்பத்தில் இருந்து தந்தை தக்ஸின் மற்றும் தந்தையின் சகோதரி யின்லிங் ஷினவத்ராவுக்கு பின்பு பொது வாழ்வுக்கு வரும் மூன்றாவது தலைவர் பேடோங்தரன் தக்ஸின். தனது தந்தையின் சகோதரியின் பின்பு இரண்டாவது பெண் பிரதமராகி உள்ள பேடோங்தரன் தக்ஸினுக்கு வயது 37.

தாய்லாந்தின் ஆளுங்கட்சியான பேயு தாய் கட்சியைச் சேர்ந்தவரான பேடோங்தரன் தக்ஸின், மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் இல்லை. அவர் பிரதமர் வேட்பாளராக இருக்க, அவர் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை. பிரதமர் பதவிக்கு அவர் ஒருவர் மட்டுமே போட்டியிட்ட நிலையில், வாக்குப்பதிவு நடந்து கொண்டிருக்கும்போதே அவர் பெரும்பான்மையைப் பெற்றிருந்தார். முன்னதாக, பேடோங்தரனுக்கு முன்பு பிரதமராக இருந்தவர் விதிகளை மீறியதற்காக அரசமைப்பு நீதிமன்றத்தால் அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இந்த நிலையிலேயே தக்ஸினை பாராளுமன்றம் பிரதமராக தெரிவு செய்துள்ளது.

# தென் லெபனானில் இஸ்ரேல் தாக்குதல்

## சிரிய பிரஜைகள் 10 பேர் பலி!

பெய்ரூட், ஒக. 19

தென் லெபனானில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் பத்துப் பேர் பலியாகினர்.

இஸ்ரேலின் தாக்குதலை தொடர்ந்து ஹிஸ்புல்லா அமைப்பினர் ரொக்கெட் தாக்குதல் நடத்தினர்.

இஸ்ரேலின் தாக்குதலில் லெபனானில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் சிரிய பிரஜைகள் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பெண்ணொருவரும் அவரது இரண்டு பிள்ளைகளும் உள்ளனர் என லெபானின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பின் ஆயுத கிடங்குகளை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குக்காகவே சகலரும் 13 குறித்து பேசுகின்றனர்!

## சரத் பொன்சேகா எம். பி. தெரிவிப்பு



கொழும்பு, ஒக. 19

**"வாக்குகளைப் பெறுவதற்காகவே அனைவரும் 13ஆவது திருத்தச் சட்டம் என்பதை உச்சரிக்கின்றனர்", என்று ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

பல விடயங்களை செய்ய முயல்வதன் மூலம் ஒருவர் சமூகங்களின் மத்தியில் பகைமை உணர்வை உருவாக்கக்கூடாது. இந்த விடயத்தில் நாங்கள் எதனை செய்தாலும் நாட்டின் அனைத்து மக்களினதும் ஆதரவு அதற்கு அவசியம்.

இந்த பரிந்துரைகளை வடக்கு, கிழக்குக்கு மாத்திரம் நடைமுறைப்படுத்தும்போது தென்பகுதி மக்கள் குழப்பத்தில் ஈடுபட்டால் அதனை உரிய தீர்வாகக் கருதமுடியாது. இவை மிகவும் உணர்வுபூர்வமான விடயங்கள். இவற்றுக்கு முதல் நாங்கள் நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டும். நாட்டை அபிவிருத்தி செய்தால் மக்கள் சமாதானமாக வாழப் பழகிக்கொள்வார்கள். நல்லிணக்கம், அமைதி, சமாதானம் போன்றவை காணப்படும்.

பொருளாதாரம் தொடர்பில் நாங்கள் பல பிரச்னைகளை எதிர்கொள்கின்றபோது வாக்குகளைப் பெறுவதற்காக மாத்திரம் அரசியல்வாதிகள் இனப் பிரச்னை குறித்துப் பேசுகின்றனர். இந்த விடயங்கள் குறித்து பேசுவதற்கு முதலில் நாட்டின் பின்னணி உரிய விதத்தில் காணப்படவேண்டும்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே பொன்சேகா மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஐ)

## வேட்பாளரின் பிரசார செலவை கண்காணிப்பதற்கு இணையம்!

கொழும்பு, ஒக. 19

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரசார செலவுகளை கண்காணிக்கும் வகையில் இணையத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளத்துக்கு "வோட் மணி மீற்றர்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளம் ட்ரான்ஸ்பரன்சி இன்ரர்நஷனல் சிறீ லங்கா நிறுவனம் மற்றும் பவ்ரல் அமைப்பு உள்ளிட்ட ஆறு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளால் உருவாக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஓய்வூதிய கொடுப்பனவு சுற்றுநிருபம் வெளியீடு!

கொழும்பு, ஒக. 19

அதிகரிக்கப்பட்ட செப்ரெம்பர் மாத ஓய்வூதிய கொடுப்பனவு ஒக்ரோபர் மாத கொடுப்பனவுடன் சேர்த்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இதற்கான சுற்றுநிருபத்தை வெளியிட்டுள்ளார்.

ஓய்வூதியம் பெறும் அனைத்து அரச ஊழியர்களுக்கும் 3 ஆயிரம் ரூபாய் இடைக்கால கொடுப்பனவு வழங்க அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மௌலானா எம். பிக்கு எதிராக மு. கா. ஒழுக்காற்று நடவடிக்கை!

கொழும்பு, ஒக. 19

பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிசாம் காரியப்பரால் இது தொடர்பான கடிதம் அலி சாஹிர் மௌலானாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பது என்று கட்சியின் உயர்பீடம் எடுத்த முடிவுக்கு மாறாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அலி சாஹிர் மௌலானா ஆதரவு தெரிவித்துள்ளார்.

எனவே, கட்சியின் முடிவுக்கு மாறான நிலைப்பாட்டை எடுத்தமைக்கு எதிராகவே அவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. (ஐ)

## வாக்காளருக்கான செலவு தொகையை ரூ. 1,000ஆக அதிகரிக்கக் கோரிக்கை!

கொழும்பு, ஒக. 19

ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர் ஒருவருக்கு செலவிடக்கூடிய அதிகபட்ச தொகை ஆயிரம் ரூபாயாக வழங்கப்படவேண்டுமென பிரதான வேட்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இது தொடர்பான முன்மொழிவுகள் குறித்த இறுதித் தீர்மானம் எதிர்காலத்தில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்றும் கூறினார்.

தேர்தல் செலவு ஒழுங்குமுறை சட்டத்தின்படி, வேட்புமனுக்கள் பெறப்பட்ட 5 நாட்களுக்குள் ஒரு வாக்காளருக்கு செலவிடப்படும் அங்கீகரிக்கப்பட்ட தொகை வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். இது தொடர்பில் முடிவெடுப்பதற்கான கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்காக ஒவ்வொரு வேட்பாளரும் செலவிட்ட தொகை தொடர்பான அறிக்கையை ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த 20 நாட்களுக்குள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வழங்கப்பட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வாக்குச்சீட்டு சரிபார்ப்பு நடவடிக்கை ஆரம்பம்!

கொழும்பு, ஒக. 19

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிட முன்னரான சரி பார்க்கும் நடவடிக்கைகள் தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டை அச்சிடுவதற்கான உத்தரவு அடுத்த சில தினங்களில் அரச அச்சகத்துக்கு வழங்கப்படும் என்று தேர்தல்கள் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேநேரம், வாக்குச்சீட்டின் நீளம் 27 அங்குலம் வரை இருக்கும். வேட்பாளர்கள் அதிகரிப்பே இதற்குக் காரணம்.

எனவே, வாக்குச்சீட்டுக்கான செலவு மதிப்பிடப்பட்ட செலவினத்தை விடவும் அதிகரிக்கும். எனினும், மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டுக்குள் குறித்த அச்சிடல் பணிகளை முன்னெடுக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணையர் சிறீ ரத்நாயக்கா தெரிவித்துள்ளார். (ஐ)

## வெள்ளத்தால் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஒக. 19

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

களுத்துறை - கோரகாதுவை பிரதேசத்தில் இந்தச் சடலம் மீட்கப்பட்டது.

இந்த சம்பவத்தில் கோரகாதுவை - மீகஹதென்ன பிரதேசத்தை சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான 32 வயது நபரே உயிரிழந்தவராவார்.

கடந்த 16ஆம் திகதி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இவர், நேற்று சடலமாக மீட்கப்பட்டார். (ஐ)

## 'சிலிண்டர்' சின்னத்துக்கு பதிலாக ரணிலுக்கு வேறு சின்னம் வழங்குக

### தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, ஒக. 19

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கியுள்ள சிலிண்டர் சின்னத்தை இரத்து செய்யுமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

மக்கள் போராட்ட சிவில் அமைப்பின் பொதுச்செயலாளர் ஜானக பண்டாரவே இந்த முறைப்பாட்டை அளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட எமக்கு வழங்கிய சிலிண்டர் சின்னத்தை எவ்வாறு சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்க முடியும்? 2023 உள்ளூராட்சி தேர்தலில் எமக்கு சிலிண்டர் சின்னம் வழங்கப்பட்டது. ஆனால், உள்ளூராட்சி தேர்தல் அரசாங்கத்தின் குளறுபடிகளால் நடைபெறவில்லை. தாக்கல் செய்யப்பட்ட எமது மனுக்கள் இரத்துச் செய்யப்படவில்லை. இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு எவ்வாறு சிலிண்டர் சின்னத்தை வழங்க முடியும்? - இதனால் எமது அரசியல் செயல்பாடுகளுக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

எனவே, அவருக்கு வழங்கப்பட்ட சிலிண்டர் சின்னத்தை இரத்துச் செய்து பிறிதொரு சின்னத்தை வழங்குமாறு முறைப்பாடு செய்துள்ளோம்", என்றார். (ஐ)

## யானைகளை கணக்கெடுக்கும் பணி 13 ஆண்டுகளின் பின்னர் ஆரம்பம்!



கொழும்பு, ஒக. 19

13 ஆண்டுகளின் பின்னர் நாடளாவிய ரீதியில் யானைகளை கணக்கெடுக்கும் பணி ஆரம்பமாகியுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் தொடங்கிய இந்தப் பணி இன்று திங்கட்கிழமை வரை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 130 நிலையங்களில் யானைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

நாட்டில் வாழும் யானைகளின் முழுமையான எண்ணிக்கையை உறுதி செய்துகொள்ளக்கூடிய வகையில் நாடளாவிய ரீதியில் தரவுகள் மற்றும் தகவல்களைப் புதுப்பிக்க 2011ஆம் ஆண்டின் பின்னர் யானைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதனால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இரத்தினபுரிக்கு வெள்ள எச்சரிக்கை!

கொழும்பு, ஒக. 19

இரத்தினபுரி மாவட்டத்தின் குடாகே, மில்லகந்தை பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி பிரதேசத்தில் களு கங்கையின் நீர்மட்டம் அதிகரித்ததே இந்த வெள்ள அபாயத்துக்குக் காரணம்.

இதேநேரம், ஜின் கங்கை, அத்தனகலு ஓயாவின் நீர்மட்டங்களும் அதிகரித்து வருகின்றன என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பெரமுனவின் எம். பி. சஜித்துக்கு ஆதரவு!

கொழும்பு, ஒக. 19

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணா கொடித்துவக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார்.

ஏற்கனவே, பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள், ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். எஞ்சியவர்கள் நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்து வருகின்றனர். இந்த நிலையிலேயே, கருணா கொடித்துவக்கு தனது ஆதரவை சஜித்துக்கு அறிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

பேச்சுகளை முன்னெடுப்பது என்றும் முடிவு எட்டப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நேற்றைய மத்திய குழுக்கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுடன் பேச்சு நடத்துவது, தேர்தல் அறிக்கைகள் வெளியான பின்னர் அவற்றையும் பரிசீலித்து தீர்மானம் ஒன்றை எடுப்பது தொடர்பில் சிறீதரன் எம். பி. நேற்றைய கூட்டத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்திருந்தார். இதை ஏகமனதாக ஏற்றே மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## உயிர்த்த...

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ சென்றார். கர்தினால் மல்கம் ரஞ்சித் மற்றும் ஆயர்களிடம் ஆசீர்வாதம் பெற்ற அவர் கத்தோலிக்க குருமார்களிடம் மேலும் தெரிவித்தவை வருமாறு,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முறையான விசாரணைகள் வெளிப்படைத்தன்மையோடு நடைபெற்றனவா என்பது குறித்தே இந்த நாட்டில் உள்ள கத்தோலிக்கர்களும் - ஒட்டுமொத்த மக்களும் எதிர்பார்த்திருக்கின்றனர். இதன் உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்பட்டதா என்பது குறித்தும் சிக்கல்கள் காணப்படுகின்றன. எனவே, இது தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு, கர்தினால் உள்ளிட்ட கத்தோலிக்க பேரவைக்கு தெளிவுபடுத்துவோம்.

அவ்வாறே, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான பின்னணி, அதன் உண்மைத்தன்மை என்பனவற்றை எந்தவித பேதமும் இன்றி கண்டறிந்து, அதனுடன் தொடர்புடைய அனை வரையும் சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகபட்ச தண்டனையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் - என்றும் சஜித் உறுதியளித்தார். (ஐ)

## தமிழ் அரசு கட்சிக்கு...

அத்துடன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிமீதான வழக்குகளை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நேற்று வவுனியாவில் தனியார் விடுதியில் நடைபெற்றது. கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என்று கட்சியின் பேச்சாளர் பின்னர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில், எமது மக்களுக்கு வழிகாட்டுவதற்காக ஆவணம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளதாகவும் இதன்போது சுமந்திரன் குறிப்பிட்டார். (ஐ)

## தமிழ் அரசு...

ணைதரியமாக விலகி தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்புடன் இணைய வேண்டும். விலகி வருபவர்களுக்கு மக்கள் அரணாக இருப்பார்கள்.

தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டும் என்றே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். இலங்கை தமிழ் அரசுக் கட்சியினர் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் இணைவதன் மூலம் ஒரு குடையின் கீழ் நாம் நிற்க முடியும். எம்மைப் பிரித்தாளும் தந்திரத்தை தென்னிலங்கை செய்கிறது. நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் குறைந்தது 5 இலட்சம் வாக்குகளை யாவது பெறவேண்டும். அப்போதுதான் நாம் தலைநிமிர்ந்துநிற்க முடியும். சர்வதேசத்துக்கும் சில விடயங்களை சொல்ல முடியும் - என்றார். (ஐ)

# தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்தும் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்போம்!

## வேட்பாளர் நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 19

செப்ரெம்பர் 21 ஆம் திகதிக்கு பின்னர் தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்திய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்போம். சுய நல தேவைகளுக்காக எம்மை விட்டு விலகிச் சென்றவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

திஸ்ஸமஹராம மகா விகாரையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தலுக்கு நாங்கள் தயாராகவே இருக்கிறோம். சர்வமத வழிபாடுகளுடன் எமது முதலாவது தேர்தல் பிரச்சாரத்தை புதன்கிழமை அநுராதபுரம் நகரில் நடத்துவோம். எமது வெற்றியில் நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் பங்காளிகளாவர்.

செப்ரெம்பர் 21 ஆம் திகதிக்கு பின்னர் தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்திய பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்போம். தேசிய உற்பத்திகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுப்போம். தனி நபரின் முன்னேற்றத்துடன் மாத்திரமே பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.



நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தங்களின் சுயநல தேவைகளுக்காக எம்மை விட்டுச் சென்ற வர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். நபர்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் செய்ய வில்லை. கொள்கையை முன்னிலைப்படுத்தி அரசியலில் ஈடுபட்டுள்ளோம்.

ஜனாதிபதி தேர்தலில் யார் யாருக்கு சவால் என்பது குறித்து கவனம் செலுத்துவதை விட நாடு எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். கொள்கை அடிப்படையில் எம்முடன் எவரும் கைகோர்க்கலாம் - என்றார். (ஐ)

## தந்தை...

வந்த அவர் காலை 9 மணியளவில் தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து, தந்தை செல்வாவின் சமாதியில் மலர் அஞ்சலி செலுத்திய பின்னர் தனது பிரசாரத்தை தொடங்கினார்.

இதன்போது, தமிழ்ப் பொது வேட்பாளருடன் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பை சேர்ந்த பொ. ஐங்கரநேசன், பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், நிலாந்தன் ஆகியோரும் உடனிருந்தனர். (ஐ)

## சமூக...

அந்த அமைப்பின் பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் வாக்களிப்பு தினத்துக்கு முந்தைய தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை தமது அமைப்பு ஆரம்பித்துள்ளது.

மாவட்ட மட்டத்தில் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

## 100 அடி...

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், புத்தளம் - கற்பிட்டியை சேர்ந்த சேகு லாப்தீன் முஹமட் காபில் (வயது 40) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

கரையிலிருந்து 24 கிலோமீற்றர் தூரத்தில் சுமார் 100 அடி ஆழத்தில் குறித்த மீனவர் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து அவரை மீட்ட சக மீனவர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்நிலையில், நேற்றுமுன்தினம் மாலை அவர் அங்கு உயிரிழந்தார்.

அவரின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ)

# யுக்திய நடவடிக்கையில் 626 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஓக. 19

நாடளாவிய ரீதியில் கடந்த நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் யுக்திய நடவடிக்கையில் 620 ஆண்களும் 6 பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்களில் 7 பேர் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இருவர் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில் மேல் மாகாணத்தில் 418 ஆண்கள், 5 பெண்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 90 கிராம் ஹெரோயின், 127 கிராம் ஐஸ் மற்றும் 236 கிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 52 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 52 கிராம் ஹெரோயின், 1.8 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்!

யாழ்ப்பாணம், ஓக. 19

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதி - சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணிமுதல் காலை 8.00 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள இரு பாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும். மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பயில விரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# 16 வயது சிறுமி வன்கொடுமை; சட்டமருத்துவ அதிகாரி கைது!

கொழும்பு, ஓக. 19

22 மாணவர்களால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 16 வயது சிறுமியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய சட்ட மருத்துவ அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

மருத்துவ பரிசோதனையின் போது தனது மகளை சட்ட மருத்துவ அதிகாரி மிரட்டும் வகையில் நடந்தார் என்று பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே பொலிஸார் சட்ட மருத்துவ அதிகாரியை கைது செய்தனர்.

இதேநேரம், சிறுமி மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் பொய் கூறினார் எனவும் சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்தார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அளித்த முறைப்பாட்டில் சிறுமியின் தாய் தெரிவித்துள்ளார்.

தாயாரின் முறைப்பாட்டை அடுத்து கைது செய்யப்பட்ட அம்பாந்தோட்டை பொது மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியை 3 இலட்சம் ரூபாய் பிணையில் செல்ல அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றம் அனுமதித்தது.

இதேவேளை, இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 20இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மேலும், சம்பவத்தை மூடிமறைத்த குற்றச்சாட்டில் சிறுமி படித்த பாடசாலையின் அதிபர் உட்பட நான்கு ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது உத்தரவு வற் வரி நீக்கம்!

## அநுரகுமார எம். பி. தெரிவிப்பு



தங்காலை, ஒக. 19

எதிர்கால தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது உத்தரவின் பிரகாரம் மருந்துகள், பாடசாலை கற்றல் உபகரணங்கள், உணவுப் பொருட்கள் மீதான வற் வரி நீக்கப்படும் என்று அந்தக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை - தங்காலையில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, எமது ஆட்சியில் எளிமைப்படுத்தப்பட்ட வரி முறைமை அறிமுகப்படுத்தப்படும். மதுபான உற்பத்தியாளர்கள் போன்ற வர்த்தகர்கள் செலுத்தத் தவறிய வரியை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மருந்துகள், மருத்துவப் பொருட்கள் மீதான வற் வரியை நீக்குவோம். பாடசாலை பொருட்கள் மேலதிக வாசிப்பு புத்தகங்கள் மீதான வற்வரியையும் நீக்குவோம். அதேநேரத்தில் உணவுப்பொருட்களுக்கு வற்வரியை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். எங்கள் அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்திலேயே இதனை செய்வோம்.

அனைத்து துறைகளிலும் வீழ்ச்சியடைந்த தேசத்தை தேசிய மக்கள் சக்தி பொறுப்பேற்க வேண்டியுள்ளது. உறுதிப்பாட்டுடன் நாங்கள் நாட்டை மீட்போம்.

தேசிய மக்கள் சக்தி எவரையும் பழிவாங்காது, எனினும் தவறிழைத்தவர்கள், ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ)

## தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் பிரசார அட்டவணை

யாழ்ப்பாணம், ஒக. 19

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் குரலாகவும், குறியீடாகவும் களமிறக்கப்பட்டிருக்கும் பா. அரியநேத்திரனின் தேர்தல் பிரசார பயண ஒழுங்கு பொலிகண்டி தொடக்கம் பொத்துவில் வரைக்குமான தமிழர் தாயகப் பிரதேசங்கள் முழுவதுமாக நடைபெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இரண்டு கூட்டங்களும் மாவட்டங்களுக்கு ஒரு பெரும் பொதுக்கூட்டமும் பொது வேட்பாளர் கலந்து கொள்ளும் கூட்டமாக இடம்பெற திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி ஒகஸ்ட் 19 - 25 வரை யாழ்ப்பாணத்திலும், 26 - 29 வரை கிளிநொச்சியிலும், ஒகஸ்ட் 30 - செப்ரெம்பர் 03 வரை முல்லைத்தீவிலும், செப்ரெம்பர் 04 - 06 வரை மன்னாரிலும், செப்ரெம்பர் 07 - 09 வரை வவுனியாவிலும், செப்ரெம்பர் 10 - 12 திருகோணமலையிலும், செப்ரெம்பர் 13 - 14 அம்பாறையிலும், செப்ரெம்பர் 15 - 19 வரை மட்டக்களப்பிலும் பொது வேட்பாளர் கலந்துகொள்ளும் கூட்டங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ரிஷாத்தின் ரூ. 200 மில். பெறுமதியான அபிவிருத்தி திட்டங்கள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக. 19

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனால் ஆறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த 200 மில்லியன் ரூபாய் பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்கள், ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைய உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

முன்னதாக மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, புத்தளம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய ஆறு மாவட்டங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனுமதியை ரிஷாத் பதியுதீன் பெற்றுக்கொண்டார். இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் வேட்பாளர்கள் மும்முரமாக ஈடுபட்டு வரும் நிலையில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கியுள்ள ரிஷாத் பதியுதீனால் முன்னெடுக்கப்பட்டு வந்த அபிவிருத்தித் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. (எ)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஒக. 19

கொழும்பு, தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வனரதன வீதிப் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த நபர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 17 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (எ)

## 2 குழந்தைகள் உட்பட ஏழு பேர் நேற்று விபத்தில் சிக்கி காயம்!

கேகாலை, ஒக. 19

இரண்டு கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தில் இரண்டு குழந்தைகள், மூன்று பெண்கள் உட்பட 07 பேர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் கேகாலை மொலகொட பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் காயமடைந்தவர்கள் கேகாலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் 8 மாத குழந்தை, ஒரு வயதும் ஆறு மாதங்களேயான குழந்தையும், மூன்று பெண்கள் மற்றும் இரண்டு ஆண்கள் காயமடைந்துள்ளதாக பொலிஸார் கூறினர். எனினும், காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## தேசிய கொடியின் பெருமை பாதாளத்துக்கு போய்விட்டது

### தேர்தல்கள் ஆணையாளர் அதிருப்தி

கொழும்பு, ஒக. 19

தேர்தல் பிரசாரங்களுக்கு தேசிய கொடியை பயன்படுத்தினால் சட்டம் அமுல்படுத்தப்படும். இன்று தேசிய கொடியின் பெருமை பாதாளத்துக்கு போய்விட்டது. எனவே, இந்த நிலை தொடருமானால் இன்னும் சில நாட்களில் தேசிய கீதம் கட்சியின் பாடலாக மாறும் என்று தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறீரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு கொழும்பில் பவ்ரல் அமைப்பின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல்வாதிகளை பார்க்கிறோம் அவர்கள் இல்லாமல் தேர்தல் இல்லை. தேசியக் கொடியின் பெருமை இன்று பாதாளத்துக்கு போய்விட்டது. எனவே, தேர்தல் பிரசாரங்களுக்கு தேசிய கொடியை பயன்படுத்த வேண்டாம்.

கிரிக்கெட் போட்டிகளில் ஒரு கையில் தேசிய கொடியை சுற்றிக் கொண்டு, மறு கையில் மதுபான போத்தலை வைத்துக் கொண்டு நடனமாடுகின்றனர். இதில் பெருமை இல்லை. நாட்டின் அபிவிருத்திப் பணிகளை நாங்கள் வேண்டாம் என்று கூறவில்லை - என்றார். (எ)

## கிராம உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க நடவடிக்கை நிறைவு

கொழும்பு, ஒக. 19

கிராம உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு, நேற்று நள்ளிரவு முதல் தமது தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளது.

கிராம உத்தியோகத்தர், தேர்தல் உத்தியோகத்தர் என்பதால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது அதிகபட்ச பங்களிப்பை வழங்க வேண்டியதன் பொருட்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அதன் இணைத் தலைவர் நந்தன ரணசிங்க தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர் சேவை யாப்பு மற்றும் கிராம உத்தியோகத்தர் கொடுப்பனவுகளை தற்போதைய பொருளாதார நிலைமைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும் எனக் கோரி நாடு முழுவதிலும் உள்ள கிராம உத்தியோகத்தர்கள் கடந்த மே மாதம் 4ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

அத்துடன், மே 17ஆம் திகதி முதல் இதுவரை காலமும் கிராம உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்ட சட்டப்படி சேவை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையும் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## 55 ஆயிரம் தொன் இலவச உரம் ஒக்ரோபருக்குள் வழங்கப்படும்!

### விவசாய அமைச்சு

கொழும்பு, ஒக. 19

ஒக்ரோபர் மாதத்துக்குள் 55 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் நாட்டுக்கு வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டத்துடன் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் விளைவாக இந்த உரக் களஞ்சியம் கிடைத்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் இரண்டு பயிர்ச் செய்கைகளுக்கு தேவையான உரம் இந்தப் பருவத்தில் இருந்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என்று கூறப்பட்டது. (ஐ)

## முச்சக்கரவண்டி சாரதி கழுத்தறுத்துக் கொலை!

கொழும்பு, ஒக. 19

முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் கொழும்பு - பத்தரமுல்லையில் கழுத்தறுத்து கொல்லப்பட்டார்.

அக்குரேகொட, அருட்பிட்டி பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முச்சக்கரவண்டி பழுது பார்க்கும் நிலையத்துக்கு அருகில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 45 வயதுடைய முச்சக்கரவண்டி சாரதி யாவார். இவர் தொடர்பில் வேறு தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பெற்றோல் ஊற்றி தீ வைத்து மனைவியை எரித்த கணவன்

கொழும்பு, ஒக. 19

கணவன் பெற்றோல் ஊற்றி தீ வைத்து எரித்ததில் பலத்த காயமடைந்த மனைவி, மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக கொழும்பு, வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

கணவன் - மனைவிக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக கணவன், மனைவியின் உடலில் பெற்றோல் ஊற்றி தீ வைத்து கொளுத்தியதாக பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் 43 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org